# Chezhumai

# செழுமை

# TIST India



T I S T   F a r m e r s   H e l p   W o r l d w i d e   P r o b l e m

## The International Small Group & Tree Planting Program

TIST India: 19/8, Lake View Road, Kottur, Chennai 600 085, Tamil Nadu, India
Phone : +91 44 42188438 / Mobile: +91 9840299822 / Email: josephrexon@tist.org

## HELPLINE

For any information or help
Dial 9003020836 / 9003020839 / 9003020843

If you have any difficulty in TIST Program Dial 9840299822

Our landline: +91 44 42188438

Our email: josephrexon@tist.org

Our address: 19/8, Lake View Road, Kottur, Chennai 600085

## தொழில்முறை உதவி

எந்த தகவல் மற்றும் உதவிக்கு
டயல் பண்ணுங்கள் : 9003020836 / 9003020839 / 9003020843

உங்களுக்கு டி.ஐ.எஸ்.டி. திட்டத்தில் ஏதாவது கஷ்டம் இருப்பின்
டயல் பண்ணுங்கள் : 9840299822

எமது நிலவழி இணைப்பு :
+91 4442188438

எமது மின்அஞ்சல் :
Josephrexon@tist.org

எமது விலாசம் :
19/8 ஏரிக்கரைச் சாலை கோட்டூர், சென்னை 600085

## How much Carbon Dioxide Equivalent (CO2e) does a tree contain?

Trees are about 50% water and 50% wood. Since wood is about 50% carbon, each tonne of live tree mass is contains about a quarter tonne of carbon. To avoid confusion, all markets use carbon dioxide equivalent (CO2e) as the metric for carbon credits. Since a tonne of carbon becomes 3.67 tonnes of carbon dioxide, one tonne of live tree mass is equal to (1 x .25 x 3.67 =) 0.91 tonnes of Co2e. Seedlings in young trees are fun to watch as they grow, but they are small and light. They do not contain much wood and thus don't contain much carbon. If you're paying for trees based on carbon, they're not worth much. Let's look at how much carbon is in a tree its first 10 years. First, it must be noted that trees grow at different rates based on species, rainfall, climate, soil and other environmental parameters. The chart below shows the cumulative the amount of carbon in a hardwood tree, measured in kilograms. After 10 years, this tree will have accumulated almost 1/10th of a metric tonne of CO2e

## ஒரு மரத்தினுடைய கார்பன் டை ஆக்ஸைடு சமானத்தின் அளவு ($Co_2e$)

மரங்கள் என்பது 50 சதவிதம் தண்ணீர், 50 சதவிதம் கட்டை அல்லது விறகு ஆகும். மரக்கட்டை என்பது 50 சதவிதம் கார்பன் என்பதால், உயிருள்ள மரத்தின் ஒவ்வொரு டன் அளவில் கால் பங்கு டன் கார்பன் உள்ளது. குழப்பத்தை தவிர்க்க சந்தையில் கார்பன் கிரிடிட்டுகளை அளவிட கார்பன் டை ஆக்ஸைடு சமானம் அளவாக எடுத்துக்கொள்ளப்படுகிறது. கார்பனின் ஒரு டன், 3.67 டன் கார்பன் டை ஆக்ஸைடுவாக மாறுகிறது, ஒரு டன்னான உயிருள்ள மரத்தின் பொருண்மை 0.91 டன் கார்பன் டை ஆக்ஸைடு சமானத்திற்கு சமமாகும். (1 x 0.25 x 3.67) = 0.91.

வளர்ந்துவரும் விதை நாற்றுகளை கவனிப்பது மிகவும் நன்றாக இருக்கும். ஆனால் அவைகள் சிறியதாகவும், இலேசாகவும் இருக்கும். அவைகளில் விறகு இல்லாததால் கார்பனும் குறைவாகவே உள்ளது. கார்பனை பொருத்து கட்டனம் செலுத்தினால் இந்த இளம் நாற்றுகள் பயன் தராது. முதல் பத்து வருடத்தில் ஒரு மரத்தின் கார்பன் கொள்ளளவு எவ்வளவு என்பதைப் பற்றி பார்ப்போம். முதலில் மரங்களின் வளர்ச்சி, அதன் இனவகை, மழை அளவு, சீதோஷன நிலை மண்வளம் மற்றும் சுற்றுபுறச்சூழல் நிலைகளை பொருத்து வேறுபடும். இங்கு கொடுக்கப்பட்டுள்ள வரைபடம் மரங்களின் கார்பன் அளவை கிலோகிராம் அளவில் விளக்குகிறது. பத்து வருடங்களுக்கு பின், இந்த மரத்தின் கார்பன் அளவானது $1/10^{th}$ மெட்ரிக் டன்னாக இருக்கும்

**Chart 1: Cumulative carbon ($CO_2e$) in a growing tree**

| Year | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Kilograms | 1 | 3 | 7 | 13 | 21 | 31 | 43 | 58 | 75 | 94 |

படம்: 1 திரளாக சேர்த்த கார்பன் ($CO_2e$) வளரும் மரத்தில்

| வருடம் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கிலோகிராம் | 1 | 3 | 7 | 13 | 21 | 31 | 43 | 58 | 75 | 94 |

## Good News

TIST Program was registered by United Nations Framework Convention on Climate Change (UNFCCC) on 15.01.2010. TIST India conveys a big thanks to all the Small Groups for the wonderful cooperation in achieving this milestone.

## நற்செய்தி

TIST-யின் திட்டம் 15.01.2010 அன்று UNFCCC-யால் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த ஒரு மிகமுக்கியமான சாதனையை அடைவதற்கு உறுதுணையாக இருந்த எல்லா சிறுகுழுவிற்கும் TIST இந்தியா பெரிய நன்றியை தெரிவித்துக்கொள்கிறது.

The planting of trees is the least self-centred of all that we do. It is a purer act of faith than bring-up children

நாம் செய்யும் செயல்களிலேயே சுயநலமற்ற செயல் மரங்களை வளர்ப்பதுதான். குழந்தைகளை வளர்ப்பதை விட நம்பிக்கைக்கு உரியது மரங்களை வளர்ப்பது.




Meeting at Ariyur / ஏரியூர் கூட்டம்

## Training in Node for February & March

During February & March, TIST Trainer will train the group members on "Protecting the trees and crops from unwanted insects in natural way". Groups are requested to make use of their Node meetings effectively.

## பிப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் நோடு கூட்டத்தில் நடைபெற்றுள்ள பயிற்சி

பிப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் TIST பயிற்சியாளர் குழு உறுப்பினர்களுக்கு நோடு கூட்டத்தில் "மரங்களில் மற்றும் விவசாயத்தில் தேவையில்லாத பூச்சிகளை எவ்வாறு இயற்கை முறையில் அகற்றலாம்", என்ற தலைப்பில் பயிற்சி அளிக்கஉள்ளர். குழுக்கள் நோடு கூட்டத்தை நன்கு பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம்.

## Simple and cost effective way to keep elephants away

Dr. Vijay D. Anand, National Director, A Rocha India, says that despite various conservation measures, the survival of the Asian elephant today continues to be threatened, in particular by persecution resulting from human-elephant conflicts, which has seriously reduced the population of the species. People who reside close to forest areas face great life threat and damage of crops by elephants. There are few traditional methods like 1) the use of solar powered fences 2) elephant proof trenches and 3) rubble walls to keep elephants away from human residing areas, but not all can afford the cost, which is more than Rs. 1 or 2 lac per km of barrier wall or fencing.

Considering all this A Rocha India tested an alternative barrier mechanism which is both effective and economical and affordable by local farmers. The use of chilly-tobacco powders was found to be successful in the case of African elephants as the smell from these powders were found to irritate the elephant as it is well known that the sense of smell is highly developed in them. So it was decided to experiment with this method in villages to see how effective it is on the Asian elephants. Ropes smeared with repellents (chilies and tobacco mix) were erected in and around the villages, in croplands and in elephant entry points to villages around the Bannerghatta National Park of southern India. Used engine oil was used as the base material for the smear. The study plots were monitored in 5 villages. The results were astounding. The chilly-tobacco barrier is not only effective but is also cost effective. For more information contact Dr Vijay D. Anand, National Director, A Rocha India, Tel: + 91 80-65312324, Email: india@arocha.org




இஞ்சின் ஆயில், மிளகாய் மற்றும் புகையிலை பொடிகளை கலந்து பயன்படுத்தபட்டுள்ள வேலி போன்ற அமைப்பு

## எளிதான மற்றும் குறைந்த விலையில் யானைகளை தூரத்தில் வைக்ககூடிய ஓர் முறை

பல நல்ல நிரந்தரமான திட்டங்கள் வகுத்தும் ஆசியா கண்டத்தில் இப்பொழுதும் யானைகளை காப்பது ஓர் சவாலாகவே உள்ளன, அதுவும் மனிதர்களுக்கும் யானைகளுக்கும் இடையே நடக்கும் சர்ச்சரவு காரணமாக யானையினம் அழிந்து வருகிறது என்று Dr. விஜய், D ஆனந்த், தேசிய இயக்குநர், எ ரோஷா இந்தியா (A Rocha India), கூறகிறார். காட்டுபகுதிக்கு அருகே வசிப்பவர்கள் யானையின் காரணமாக பல பிரச்சனைகள் மற்றும் சேதத்தை சந்திக்கின்றனர். கடந்த காலத்தில் இருந்து இக்காலம் வரை இருக்கும் செயல் முறைகளான **1)** சூரிய ஒளியுடன் தயாரிக்கப்படும் மின்தடுப்பு வேலி அமைப்புதல் **2)** யானைகள் தாண்ட முடியாத அளவுக்கு நிலத்தில் நீண்ட தூரம் தொடர்ந்து தோண்டப்பட்ட குழி **3)** சிதைவுற்ற கல் கூளம் கொண்டு கட்டப்பட்ட தடுப்பு சுவர் மூலமாக யானைகளை மனிதர்கள் வசிக்கும் இடத்திற்கு வராமல் கட்டுப்படுத்த முடியும் ஆனால் இந்த மூன்று முறைகளுக்கும் பெருஞ்செலவு ஆகும், ஒரு கிலோ மீட்டர் வரை தடுப்பு சுவர் மற்றும் வேலி அமைப்பதற்க்கு 1 இலட்சத்திலிருந்து 2 இலட்சம் வரை ஆகும்.

இந்த கடினத்தை ஆழ்ந்து நோக்கி A Rocha ஓர் புதிய மாற்று தடை வேலி முறையை சோதித்துள்ளார்கள். இந்த தடை வேலி அமைப்புதல் சிக்கனமாகவும் வெற்றிகரமாகவும் மற்றும் விவசாயிகள் எளிதில் அமைக்க கூடியதாகவும் உள்ளது. ஆப்பிரிகா கண்டத்தில் மிளகாய் மற்றும் புகையிலை பொடியை பயன்படுத்துகின்றனர், இந்த கலவையில் இருந்து வரும் நெடி யானைகளை வெற்றிகரமாக விரட்டி விடுவதற்க்கு உதவுகின்றது. அதனால் இந்த முறையை / சோதனையை ஆசியா கண்டத்தில் உள்ள யானைகள் மீது பயன்படுத்துவதற்காக முடிவு செய்தனர். தடியான கயிறுகளில் பயன்படுத்திய இஞ்சின் ஆயில், மிளகாய் மற்றும் புகையிலை பொடிகளை கலந்து பன்னர்கட்டா தேசிய பூங்காவை சுற்றி உள்ள கிராமங்களில் விவசாய நிலங்களை சுற்றி கம்பங்கள் கொண்டு வேலி போல் அமைத்தார்கள். ஐந்து கிராமங்களில் இந்த புதிய முறை சோதனை செய்து பார்த்தார்கள், முடிவுகள் பெரிதும் ஆச்சரியப்பட வைக்கிறது. இந்த மிளகாய் மற்றும் புகையிலை பொடி தடை வேலி வெற்றிகரமாகவும் மற்றும் குறைந்த விலையில் அமைக்க கூடிய ஒரு முறையாகும். மேலும் விபரங்களுக்கு Dr. விஜய், D.ஆனந்த், தேசிய இயக்குநர், எ ரோஷா இந்தியா (A Rocha India), தொலைபேசி எண் : +91 80-65312324, மின் அஞ்சல் : india@arocha.org அணுகவும்.



Meeting at Avaniyapuram / ஆவணியாபுரம் கூட்டம்

## Good activities of Small Groups at Avaniyapuram

All the Small Groups of Avaniyapuram village are showing good interest in TIST Program and carrying out the best practices effectively. The groups plant all long standing trees like, teak, kumil and neem. They give good spacing between each tree while planting and also practice short time crops as intercrops regularly. Short time crops like groundnut, chilly, grams and ladies finger are favourite crops for the small groups of Avaniyapuram village. Mahendiran Small Group has tried flowering plant too, samandhi flower plant is planted in between the teak trees, and they are growing well.

## ஆவணியாபுரம் கிராமத்தில் உள்ள சிறுக்குழுக்களின் நல்ல நடவடிக்கைகள்

ஆவணியாபுரம் கிராமத்தில் உள்ள எல்லா சிறுகுழுக்களும் TIST திட்டத்திற்கு நல்ல ஆர்வம் காட்டி வருகின்றனர், TIST பயிற்சி முறைகளை நல்ல முறையில் கடைபிடித்து வருகின்றனர். இங்கு உள்ள எல்லா சிறுகுழுக்களும் நீண்ட கால மரங்களான தேக்கு, குமிழ் மற்றும் வேப்பமரங்களை நடவு செய்கிறார்கள். மரங்களை நல்ல இடைவெளி விட்டு நடவு செய்து அதன் இடையில் குறுகிய கால பயிற்களை ஊடுபயிராக செய்து வருகின்றனர். வேர்கடலை. மிளகாய், பயிறு வகைகள் மற்றும் வெண்டைக்காய் போன்ற பயிற்கள் இந்த குழுக்களின் விருப்பமான ஊடுபயிற்கள் ஆகும். மகேந்திரன் சிறுகுழு பூவகை செடிகளை பயிறிட்டுள்ளார், சாமந்தி பூச்செடிகளை தேக்கு மரங்களுக்கிடையே பயிறிட்டுள்ளார், இவை நன்கு வளர்கின்றன.



Teak tree grove of Mahendran Small Group, samandhi flower plants as intercrops
மகேந்திரன் சிறுகுழுவின் தேக்கு மரத்தோப்பு, சாமந்தி செடிகள் ஊடுபயிராக உள்ளன

## Vishnu Small Group of Chetpet Center

The members of this Small Group are following the best practices of TIST at Avaniyapuram village at Chepet Center. All the members of this group prefer teak trees because this species gets good return after 25 years. They have planted teak trees in three groves, all totaling to 814 trees. The members show great interest in practicing intercrops too. During the recent quantification they had grams in between the teak trees.

## சேத்துப்பட்டு மையத்தை சார்ந்த விஷ்னு சிறுகுழு

இக்குழுவை சார்ந்த உறுப்பினர்கள் சேத்துப்பட்டு மையத்தை சார்ந்த ஆவணியாபுரம் கிராமத்தில் TIST யின் சிறந்த பயிற்சி முறைகளை கடைப்பிடித்து வருகின்றனர். இக்குழுவில் உள்ள எல்லா உறுப்பினர்களும் தேக்கு மரம் மிக பிடித்த ஓர் மரவகையாகும், ஏனெனில் இந்த மரங்கள் 25 வருடத்திற்கு பிறகு நல்ல வருமானத்தை பெற்று தரும். இக்குழு உறுப்பினர்கள் அவர்களின் மூன்று தோப்புகளில் மொத்தம் 814 தேக்கு மரங்களை நடவு செய்துள்ளனர். இந்து உறுப்பினர்கள் ஊடுபயிற் செய்வதிலும் நல்ல ஆர்வம் காட்டுகின்றனர். கடைசியாக செய்யப்பட்ட கணக்கெடுப்பின் போது இவர்களின் தேக்கு மரத்தோப்புகளில் பருப்பு வகை ஊடுபயிராக பயிரிடப்பட்டு இருந்தது.



Member of Vishnu Small Group showing the gram intercrop which is done in their teak tree grove

விஷ்னு சிறுகுழுவின் உறுப்பினர் அவர்களது தேக்கு மரத்தோப்பில் உள்ள பருப்பு வகை ஊடுபயிர் செடிகளை எடுத்துகாட்டுகிறார்

## Ravi Small Group of Ariyur Village

The members of this Small Group are following the best practices of TIST at Ariyur village at Vellore District. This group received 800 teak seedlings from Rotary Club, which they have planted in 3 acres of their own land. Since the members of this group do not have good water facility, they have taken up tree planting activities. They have planted teak trees all round their land (border planting) which was kept idle for few years. The members of this group are watering the teak trees by bringing water in pots from a nearby well. During 2010 rainy season they have planned to plant fruit bearing trees like sapota and guava inside the land. When they plant these trees, they would be watering the trees by way of ridges & furrows, so that, they can practice intercrops too.

## ஏரியூர் கிராமத்தை சார்ந்த ரவி சிறுகுழு

இக்குழுவை சார்ந்த உறுப்பினர்கள் வேலூரர் மாவட்டத்தில் உள்ள ஏரியூர் கிராமத்தில் TIST யின் சிறந்த பயிற்சி முறைகளை கடைப்பிடித்து வருகின்றனர். இந்த குழு உறுப்பினர்கள் ரோட்டரி கிளப் இடம் இருந்து 800 தேக்கு மரக்கன்றுகளை இலவசமாக பெற்றனர், இம்மரக்கன்றுகளை சென்ற மாதம் அவர்களின் மூன்று ஏக்கர் நிலங்களை சுற்றி நடவு செய்தனர். இந்த குழுவின் உறுப்பினர்களிடம் போதிய தண்ணீர் வசதி இல்லாத காரணத்தினால் மரம் நடவு திட்டத்தில் சேர்ந்துள்ளனர். இவர்கள் பல ஆண்டுகளாக பயன்படுத்தாமல் இருந்த அவர்களின் சொந்த நிலத்தை சுற்றி மரங்களை நடவு செய்துள்ளார்கள். உறுப்பினர்கள் இந்த புதிதாக நட்ட மரங்களுக்கு குடம் கொண்டு அருகில் உள்ள கிணற்றில் இருந்து தண்ணீர் கொண்டு வந்து ஊற்றி வருகின்றனர். 2010–தில் வரும் மழைக்காலத்தில் சப்போட்டா மற்றும் கொய்யா போன்ற பழ வகைமரங்களை நிலத்தினுள் நடலாம் என்று திட்டமிட்டுள்ளனர். இந்த பழவகை மரங்களை நடும்போது நல்ல முறையில் பாத்தி அமைத்து மரங்களுக்கு நீர் பாசனம் செய்யலாம் என்று திட்டமிட்டுள்ளனர், இம்முறை நீர் பாசனத்தினால் நல்ல முறையில் ஊடுபயிறும் செய்யலாம்.





Member of Ravi Small Group watering their teak trees with help of pot
ரவி சிறுகுழுவின் உறுப்பினர் அவர்களது தேக்கு மரத்திற்க்கு குடம் கொண்டு தண்ணீர் உற்றுகிறார்கள்.

Neem, a tree for solving global warming problem, plant neem trees
வேம்பு, உலகளாவிய சுற்றுச்சூழல் பிரச்சனைகளை தீர்க்கும் மரம், வேம்பு நடவு செய்யுங்கள்

## Best practices followed by the small groups of this month Chezhumai

- Planting multiple tree species
- Planting long standing tree species
- Watering trees effectively with available water
- Practicing intercrops continuously

## இம் மாத செழுமை இதழில் வரும் சிறுகுழுவினரின் சிறந்த பயிற்சி முறைகள்

- வெவ்வேறு விதமான மரவகைகளை நடவு செய்வது.
- நீண்ட கால மரங்களை நடவு செய்வது.
- இருக்கும் தண்ணீரை மரங்களுக்கு நல்ல முறையில் பயன்படுத்துவது
- தொடர்ந்து ஊடபயிற் செய்வது



Member of Ravi Small Group explaining about their grove to the members of Rotary Club
ரவி சிறுகுழுவின் உறுப்பினர் ரோட்டரி கிளப் உறுப்பினர்களுக்கு அவர்களின் தோப்பை பற்றி எடுத்து கூறுகிறார்

**Sign the GHG agreement and take the Voucher payment**
ஜிஎச்ஜி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு உடனடியாக வவுச்சர் தொகையைப் பெற்றுக் கொள்ளுங்கள்

**Avoid monoculture. Have multiple species with good spacing**
ஓர் இன பயிர் செய்யும் முறையை கைவிடுதல் – நன்றாக இடைவெளிவிட்டு பலவகை இன பயிர் செய்யும் முறையை கடைபிடித்தல்

## Meeting at Mambakkam

TIST organized a meeting at Mambakkam village in Vellore on 08.01.2010. Mr.V.Mohan, Divisional Forest Officer (DFO), Social Forestry Division, Vellore District, participated in the meeting and explained to the TIST participants all about the importance trees. Mr.Mohan answered to several queries to the participants, particularly on teak and kumil tree species. He invited the participants to his office for any guidance or help on tree planting activities. All the TIST participants who participated in the meeting were very happy to the response give by the DFO. In the end of the meeting, Mr.Mohan distributed TIST vouchers (stipend) to the TIST Small Groups and advised the participants to make use of the TIST Program effectively.

## மாம்பாக்கம் கூட்டம்

08.01.2010 அன்று TIST இந்தியா வேலூரில் உள்ள மாம்பாக்கம் கிராமத்தில் ஒரு கூட்டம் ஒன்று ஏற்பாடு செய்தது. இக்கூட்டத்தில் திரு.வி.மோகன், (DFO), சமூக காடுவளர்ப்பு கோட்டம் வேலூர் மாவட்டத்தில், கலந்து கொண்டு TIST உறுப்பினர்களுக்கு மரங்களின் முக்கியத்துவத்தை பற்றி எடுத்துரைத்தார். திரு.வி.மோகன், உறுப்பினர்கள் கேட்ட பல சந்தேகங்களுக்கு விளக்கம் அளித்தார், குறிப்பாக தேக்கு மற்றும் குமிழ் மர இனங்களை பற்றி அதிக விளக்கம் அளித்தார். இக்கூட்டத்தில் கலந்து கொண்ட TIST அங்கத்தினர் அனைவரும் DFO–வின் நல்ல கருத்தை கேட்டு மகிழ்ச்சி அடைந்தனர். இக்கூட்டத்தில் இறுதியில் திரு.வி.மோகன் TIST பற்றுச்சீட்டை (ஊக்கத்தொகை) TIST சிறுகுழுக்களுக்கு வழங்கி TIST திட்டத்தை நன்கு பயன்படுத்துமாறு கேட்டுக்கொண்டார்.



Mr.V.Mohan distributing TIST Vouchers to TIST Small Groups
திரு.வி.மோகன் TIST உறுப்பினர்களுக்கு TIST பற்றுச்சீட்டை வழங்குகிறார்



Mr.V.Mohan answering the queries to TIST Small Group members
திரு.வி.மோகன் TIST உறுப்பினர்களின் சந்தேகங்களுக்கு விளக்கம் அளிக்கிறார்



## டிஜஎஸ்டி நிகழ்வில் பங்குகொள்ள அங்கத்தினர்கள் பூர்த்தி செய்ய வேண்டிய தகுதிகள்

1. ஒவ்வொரு சிறு குழுவிலும் குறைந்தது மூன்று வெவ்வேறு குடும்பங்களை சார்ந்த 6 முதல் 12 உறுப்பினர்கள் இருக்க வேண்டும்.
2. ஒவ்வொரு சிறு குழுவும் குறைந்தது 1,000 உயிர் மரங்களை, டிஜஎஸ்டியில் சேர்ந்த ஒரு வருடத்திற்குள் வளர்க்க வேண்டும்.
3. டிஜஎஸ்டியில் சேர்ந்து ஐந்து வருடங்களுக்குள் குறைந்தது 5,000 உயிர் மரங்களை கொண்டிருக்க வேண்டும்.
4. உங்கள் சிறு குழு ஒவ்வொரு வருடமும் 20, வருடங்களுக்கு அழிந்த அல்ல விழுந்தபோன மரங்களின் இடத்தில் புதிய மரங்களை வளர்க்க வேண்டும.,
5. எல்லா சிறு குழுவும் கிரீன்ஹவுஸ் உடன்படிக்கையில் கையெழுத்திட வேண்டும்.
6. டிஜஎஸ்டி ஒரு வருடத்திற்கு ஒரு உயிர் மரத்திற்கு ரூ.1.50 (US $0.03) கொடுக்கும் (கிரீன் ஹவுஸ் உடன்படிக்கையை படித்து மேலும் விவரங்களை தெரிந்து கொள்ளுங்கள்).
7. புதர்கள் அல்லது 4மீ உயரத்திற்கு குறைவாக வளரும் இனவகை மரங்களை டிஜஎஸ்டி மரமாக கணக்கில் எடுத்து கொள்ளாது.
8. 2மீஇடைவெளிக்கும் குறைவாக பயிரிடப்படும் மரங்கள் கணக்கில் எடுக்க இயலாது.
9. 10 வருடங்கள் அதற்கு மேல் வளர்ந்த மரங்களையே டிஜஎஸ்டி அறுவடை செய்ய அனுமதியளிக்கும். எனினும் ஒரு வருடத்திற்கு 5 சதவிகிதத்திற்கு மேலாக அறுவடை செய்ய கூடாது.
10. ஒவ்வொரு சிறு குழுவும் 33 சதவிகிதத்திற்கும் குறைவாகவே குறுகியகால மரங்கள் இருக்கவேண்டும். (உ.த. தைலமரம்) தற்பொழுதிய குழுக்கள் 33 சதவிகிதத்திற்கு மேல் குறுகியகால சுழற்சி முறை மரங்களை வளர்ப்பின் அவர்கள் 5 வருடம் (2012) வரை கூடுதலான மரங்களை வளர்க்க காலம் கொடுக்கப்படும். அல்லது இந்த தகுதியடையும் வரை மரங்களை அறுவடை செய்ய இயலாது.
11. டிஜஎஸ்டி சிறு குழுக்கள் ஆண்டிற்கு ஒரு முறை கட்டாயமாக ஆய்வாளர்களை அழைத்து தங்கள் தோப்பினை ஆய்வு செய்து கொள்ள வேண்டும். இவர்கள் மற்ற சிறு குழுவினரோடு சேர்ந்து ஆய்வின் பொழுது, ஆய்வாளர்களுக்கு உணவும், தங்கும் இடமும் ஏற்பாடு செய்ய வேண்டும்.
12. சிறு குழு அங்கத்தினர் ஒன்றாக கூடி தங்களின் பயிற்சி முறைகளையும். ஆலோசனைகளையும் பகிர்ந்து கொள்ள வேண்டும். ஒவ்வொரு வாரமும் சந்திக்க இயலாவிட்டால் மாதம் ஒரு முறையாவது சந்திக்க வேண்டும்.
13. சிறு குழு அங்கத்தினர் தாங்கள் மரங்களை வளர்க்கும் நிலத்தின் உரிமை சான்றினை அளிக்க வேண்டும்.
14. குழுவின் அங்கத்தினர்கள் டிஜஎஸ்டி பயிற்சியில் பங்கு கொண்டு மற்ற குழுக்களுடன் தங்களின் சிறப்பு பயிற்சி முறைகளை பகிர்ந்து கொள்ளவேண்டும்.
15. உங்கள் சிறு குழு உள்ள பகுதியில் மற்ற சிறு குழுக்களும் நடந்து செல்லும் தூரத்தில் அமைந்திருக்க வேண்டும். ஒரு வருடத்திற்குள் 100,000 மரங்களும் 5 வருடங்களுக்குள் 300,000 மரங்கள் வளர்க்கும் தகுதியும் கொண்டிருக்க வேண்டும்.